**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.52/2022**
**Deposition of witness of Defendant – D.W.4**
**02.09.2025**

| | | |
|---|---|---|
| **Name** | : | பழனியம்மாள் |
| **Father /Husband Name** | : | ராமசாமி |
| **Village** | : | மாதிராபட்டி |
| **Taluk** | : | விராலிமலை |
| **Age** | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 02nd day of September 2025.

**சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை:**

1. எனக்கு இவ்வழக்கில் சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. நான் விராலிமலையில் தேங்காய் மண்டி வைத்துள்ளேன். எனக்கும், வாதி கோகிலாவிற்கும் இடையே வரவு செலவு உள்ளது.

2. எனக்கும், அவருக்கும் இடையே 2016ஆம் ஆண்டு முதல் வரவு செலவு உள்ளது. நான், வாதி கோகிலாவிடம் கடைசியாக ரூ.5,00,000/- கடன் வாங்கினேன். அதற்கான வரவு செலவை எழுதி வைத்துள்ளேன். அந்த வரவு செலவு நோட்டை தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த நோட்டில் 86, 87 ஆம் பக்கங்களில் கோகிலாவின் வரவு செலவு கணக்கு உள்ளது.

3. கோகிலாவுடன் எனக்கு 2016ஆம் ஆண்டு முதல் பழக்கம். அவருடன் போனில் பேசிக்கொள்வேன். என்னிடம் வட்டி வாங்கி செல்வார். தாவா ஒப்பந்தத்திற்கான பத்திர செலவுகளை நான் தான் கொடுத்தேன். அது பற்றிய விவரங்களை நோட்டில் எழுதியுள்ளேன்.

4. 2019ஆம் ஆண்டு எனது இடத்தை விற்று ரூ.3,00,000/- கொடுத்துவிட்டேன். நான் பெற்ற கடனுக்காக வாதியிடம் எனது அண்ணன் மனைவி உமாமகேஸ்வரியின் பத்திரத்தை கொடுத்திருந்தேன். அதற்கு கிரைய ஒப்பந்தம் எழுதி தருமாறு சொன்னார். எனக்கும், வாதிக்கும் இடையே மட்டுமே வரவு செலவு உள்ளது. வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே எந்த வரவு செலவும் இல்லை.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/-திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.